4 copies (73)

(36)

AUG 2008
திருவாரூர்

## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – கல்வி – விடுதிகள் – 2008–2009–ஆம் ஆண்டு – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவ/மாணவியருக்கு 25 புதிய விடுதிகள் துவங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந1) துறை</u>

**அரசாணை (நிலை) எண். 91** **நாள்: 14.8.2008.**

**படிக்கப்பட்டது :**

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண். பி4/1884/2008,
நாள். 16.5.2008.

– – – – –

**<u>ஆணை:</u>**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கீழ் தற்பொழுது 1181 மாணவ/மாணவியர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. 2008–2009–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ/மாணவியர் அதிக அளவில் தங்கிப் பயில உதவும் வகையில் புதிதாக 25 விடுதிகள் திறக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி 2008–2009–ஆம் ஆண்டில் 25 புதிய விடுதிகளை துவக்கக் கோரி பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மேற்கூறிய செயற்குறிப்பு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன:-

| | |
|---|---|
| (i) | 2008–2009–ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ/மாணவியர் தங்கி கல்வி பயில இணைப்பில் கண்டுள்ளவாறு 25 (இருபத்தைந்து மட்டும்) புதிய பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளை துவங்கிட அரசு ஆணையிடுகிறது. |
| (ii) | 2008–09–ஆம் ஆண்டு துவங்கப்படும் 25 விடுதிகளில், 19 பள்ளி விடுதிகளாகவும், 6 கல்லூரி விடுதிகளாகவும் இயங்கும். 19 பள்ளி விடுதிகளில் 14 விடுதிகள் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளாகவும், 5 விடுதிகள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளாகவும் இயங்கும். அதுபோல் 6 கல்லூரி விடுதிகளில் 5 விடுதிகள் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளாகவும், 1 விடுதி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியாகவும் இயங்கும். |

| | |
|---|---|
| (iii) | இந்த 25 புதிய விடுதிகளையும் ஆகஸ்ட் 2008 முதல் வாடகை கட்டிடத்தில் துவங்கிட அனுமதிக்கப்படுகிறது. |
| (iv) | ஒவ்வொரு விடுதியிலும் 50 மாணவ/மாணவியரைச் சேர்க்க வேண்டும். |

3. புதிதாக துவங்கப்படும் 25 விடுதிகளுக்கும் ரூ.5500–175–9000 என்ற ஊதிய ஏற்ற முறையில் 25 பி.எட். பட்டதாரி போதக காப்பாளர்/காப்பாளினி பணியிடங்களும், ரூ.2550–50–3200 என்ற ஊதிய ஏற்ற முறையில் 25 சமையலர் பணியிடங்களும், ரூ.2550–50–3200 என்ற ஊதிய ஏற்ற முறையில் 25 காவலர் மற்றும் ஏவலர் பணியிடங்களும் ஆக மொத்தம் 75 பணியிடங்களும் அவை நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக ஏற்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 2–ல் புதிதாக துவங்கிட அனுமதிக்கப்பட்டுள்ள 25 விடுதிகளுக்கு 2008–09–ஆம் ஆண்டில் தொடர் செலவினமாக ரூ.1,14,93,850/– (ரூபாய் ஒரு கோடியே பதிநான்கு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) மற்றும் தொடரா செலவினமாக ரூ.42,60,000/– (ரூபாய் நாற்பத்திரண்டு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.1,57,53,850/–க்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகின்றது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

(i) <u>பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்:- 19 (பள்ளி விடுதிகள்–14, கல்லூரி விடுதிகள்– 5)</u>

2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 277 கல்வி பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II - மாநில திட்டம் – JA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்.

| | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>(DPC 2225-03-277-JA-0106) | 37,73,248 | — |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-JA-0553) | — | 5,70,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை<br>(DPC 2225-03-277-JA-0615) | 9,12,000 | — |
| 24 பொருட்களும் வழங்கலும்<br>(DPC 2225-03-277-JA-2408) | — | 18,91,400 |
| 34 ஏனைய செலவுகள்,<br>02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-JA-3425) | — | 6,20,000 |

–3-

| | | |
|---|---|---|
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-JA-6799) | 36,92,400 | --- |
| 68 புத்தகங்கள் நோட்டு புத்தகங்கள்<br>சிலேட்டுகள் ஆகியவற்றிற்கு ஆகும் செலவு<br>(DPC 2225-03-277-JA-6806) | 1,22,500 | --- |
| 99 பல்வகை<br>(DPC 2225-03-277-JA-9901) | 2,51,040 | 1,90,000 |
| மொத்தம் | 87,51,188 | 32,71,400 |

**(ii)** <u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்:- 6 (பள்ளி விடுதிகள்-- 5, கல்லூரி விடுதி -- 1)</u>
2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – II - மாநில திட்டம் – KA – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்.

| | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>(DPC 2225-03-277-KA-0105) | 11,91,552 | --- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-KA-0552) | --- | 1,80,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை<br>(DPC 2225-03-277-KA-0614) | 2,88,000 | --- |
| 24 பொருட்களும் வழங்கலும்<br>(DPC 2225-03-277-KA-2407) | --- | 5,88,600 |
| 34 ஏனைய செலவுகள்,<br>02--நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-KA-3424) | --- | 1,60,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-KA-6798) | 11,42,400 | --- |
| 68 புத்தகங்கள் நோட்டு புத்தகங்கள்<br>சிலேட்டுகள் முதலியவற்றிற்கு ஆகும் செலவு<br>(DPC 2225-03-277-KA-6805) | 43,750 | --- |
| 99 பல்வகை<br>(DPC 2225-03-277-KA-9900) | 76,960 | 60,000 |
| மொத்தம் | 27,42,662 | 9,88,600 |

– 4 -

6. தொடரா செலவினக்கில் ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரி விடுதிக்கு கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான செலவினம் அனுமதிக்கப்படுகின்றது.

| வரிசை எண். | செலவினம் | அனுமதிக்கப்படும் தொகை ரூ. |
|---|---|---|
| (i) | எரிவாயு இணைப்பு | 30,000 |
| (ii) | நூலக வசதி | 30,000 |
| (iii) | பாத்திரங்கள் | 30,000 |
| (iv) | மரச்சாமான்கள் | 30,000 |
| (v) | அரவை இயந்திரம் | 8,000 |
| (vi) | குடிநீர் சுத்திகரிக்கும் கருவி | 11,000 |
| (vii) | விளையாட்டு கருவிகள் | 5,000 |
| (viii) | பாய் (50 எண்ணிக்கை x ரூ.44) | 2,200 |
| (ix) | பெட்ஷீட் (50 எண்ணிக்கை x ரூ.100) | 5,000 |
| (x) | முதலுதவி பெட்டி | 650 |
| (xi) | தட்டு மற்றும் டம்ளர் (50 எண்ணிக்கை x ரூ.75) | 3750 |
| (xii) | அகராதி மற்றும் அட்லஸ் (50 எண்ணிக்கை x ரூ.175) (பள்ளி விடுதிக்கு மட்டும்). | 8750 |

7) மேலே பத்தி 5–ல் கல்லூரி விடுதி மற்றும் பள்ளி விடுதிகளுக்கு அனுமதிக்கப்பட்ட இனங்கள் தவிர ஒவ்வொரு கல்லூரி விடுதிக்கும் கீழ்க்கண்டவாறு கூடுதல் இனங்களுக்கும் செலவினம் அனுமதிக்கப்படுகின்றது.

(i) இன்வர்ட்டர் ரூ. 15,000/–

(ii) பாடக்குறிப்பு புத்தகம் ரூ. 10,000/–

8) இது ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். உரிய காலத்தில் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு – செலவு I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்ய தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் நிதி (வரவு – செலவு I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

– 5 –

9. இவ்வாணை நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா. எண்.48785/பி.மி.பி./2008, நாள். 12.8.2008 மற்றும் அ.சா.எண். 50663/CMPC/2008, நாள். 14.8.2008–ல் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 583 (ஐநூற்று எண்பத்து எட்டு).

(ஆளுநரின் ஆணைப்படி)

ந. வாசுதேவன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை – 5
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–18 /(பெயரில்)
மாநில கணக்காயர் (தணிக்கை – 1), சென்னை18/(பெயரில்)
மாநில கணக்காயர் (தணிக்கை–2), சென்னை – 6/(பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 5/மதுரை.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்
நகல் :
நிதித்(பி.மிபி/வ.செ.பொ.I/வ.செ.பொ.II/CMPC) துறை, சென்னை– 9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 9.
அமைச்சர் (பிந) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 9.
பி.மி.பி (ம) சிந (பிந3 /சிந.ஆபி) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 19/8/08.
19/8/08

## இணைப்பு

**(அரசாணை (நிலை) எண். 91, பி, மி.பி. (ம) சி.நலத்துறை, நாள். 14.8.2008)**

**2008–09–ஆம் ஆண்டில் புதிய அறிவிப்புகளின் கீழ் 25 புதிய பிவ/மி.பிவ விடுதிகளின் பட்டியல்**

**பள்ளி விடுதிகள்**

| வ. எண். | மாவட்டம் | ஊரின் பெயர் | விடுதிகளின் விவரம் |
|---|---|---|---|
| 1. | தூத்துக்குடி | அனந்தபுரம் | பி.ந. பள்ளி மாணவர் விடுதி |
| 2. | சிவகங்கை | வேதியரேந்தல் | பி.ந. பள்ளி மாணவர் விடுதி |
| 3. | சிவகங்கை | மாங்குடி | மி.பி. பள்ளி மாணவியர் விடுதி |
| 4. | புதுக்கோட்டை | கீழாநிலைக்கோட்டை | பி.ந. பள்ளி மாணவர் விடுதி |
| 5. | புதுக்கோட்டை | கோட்டைபட்டிணம் | பி.ந. பள்ளி மாணவர் விடுதி |
| 6. | பெரம்பலூர் | காரை | பி.ந. பள்ளி மாணவியர் விடுதி |
| 7. | திருநெல்வேலி | திருநெல்வேலி | பி.ந. பள்ளி மாணவியர் விடுதி |
| 8. | திருவள்ளூர் | பூண்டி | பி.ந. பள்ளி மாணவர் விடுதி |
| 9. | விருதுநகர் | முத்துராமலிங்கபுரம் | பி.ந. பள்ளி மாணவியர் விடுதி |
| 10. | விருதுநகர் | அழகிய நல்லூர் | பி.ந. பள்ளி மாணவியர் விடுதி |
| 11. | திண்டுக்கல் | தேவத்தூர் | பி.ந. பள்ளி மாணவர் விடுதி |
| 12. | கிருஷ்ணகிரி | மோரனஹள்ளி | பி.ந. பள்ளி மாணவர் விடுதி |
| 13. | திருவாரூர் | தலைக்காடு | மி.பி. பள்ளி மாணவர் விடுதி |
| 14. | கடலூர் | அண்ணா கிராமம் | மி.பி. பள்ளி மாணவர் விடுதி |
| 15. | தஞ்சாவூர் | குருவிக்கரம்பை | பி.ந. பள்ளி மாணவர் விடுதி |
| 16. | திருவண்ணாமலை | பெரிய கொழப்பலூர் | மி.பி. பள்ளி மாணவர் விடுதி |
| 17. | நாமக்கல் | நாமகிரி பேட்டை | பி.ந. பள்ளி மாணவியர் விடுதி |
| 18. | இராமநாதபுரம் | உச்சிநத்தம் | பி.ந. பள்ளி மாணவர் விடுதி |
| 19. | இராமநாதபுரம் | கீழத்தூவல் | மி.பி. பள்ளி மாணவியர் விடுதி |
| **கல்லூரி விடுதிகள்** | | | |
| 20. | திருச்சி | துவாக்குடி | பி.ந. கல்லூரி மாணவர் விடுதி |
| 21. | விருதுநகர் | சாத்தூர் | பி.ந. கல்லூரி மாணவர் விடுதி |
| 22. | விருதுநகர் | விருதுநகர் | பி.ந. கல்லூரி மாணவியர் விடுதி |
| 23. | விருதுநகர் | அருப்புக்கோட்டை | பி.ந. கல்லூரி மாணவர் விடுதி |
| 24. | கன்னியாகுமரி | மார்த்தாண்டம் | பி.ந. கல்லூரி மாணவர் விடுதி |
| 25. | சேலம் | மேட்டூர் | மி.பி. கல்லூரி மாணவியர் விடுதி |

//உண்மை நகல்//

19/8/08

பிரிவு அலுவலர்

19/8/08